www.StudyGuideIndia.com

7078

Register Number | | | | | |

**Part III**

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

( மதிப்பெண்கள் : 30 × 1 = 30 )

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. நிகர இலாபம், இலாப நட்டக் கணக்கிலிருந்து ........................ கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2. இருப்புநிலைக் குறிப்பில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு ........................ லிருந்து கழித்துக் காட்டுதல் வேண்டும்.

3. 01. 04. 2003 இருப்பாய்வில் வங்கிக் கடன் ரூ. 7,00,000 : வட்டி வீதம் ஆண்டுக்கு 10%, வட்டி செலுத்தியது ரூ. 50,000. 31. 03. 2004 அன்று நிலுவையிலுள்ள வட்டி ரூ. ........................ .

4. ஒரு நிலை அறிக்கை ........................ போன்று தோற்றமளிக்கும்.

[ Turn over

www.StudyGuideIndia.com

பராமரிக்கப்படுகின்றன.

6. வீடு, கருவிகள் போன்ற சொத்துக்கள் மீது தேய்மானம் நீக்குவதற்கு ஏற்ற முறை ........................ ஆகும்.

7. பொறிவகை ஒன்றின் விற்பனை விலை ரூ. 5,00,000. அதை விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ. 59,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு ரூ ........................ .

8. நீர்மைப் பொறுப்புகள் என்பது நடப்புப் பொறுப்புகளில் இருந்து ........................ யை கழித்த தொகையாகும்.

9. சரக்கிருப்பு விற்பனை விகிதம் ........................ என்றும் அழைக்கப்படுகிறது.

10. ரொக்கத் திட்டப்பட்டியல் ........................ என்றும் அழைக்கப்படுகிறது.

11. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் ........................ அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்.

12. தொழிலின் இலாப நட்டங்களை கூட்டாளிகள் ........................ விகிதத்தில் பங்கிட்டுக் கொள்கின்றனர்.

13. பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் இருப்பு நிலைக்குறிப்பின் ........................ பக்கத்தில் தோன்றும்.

14. இரு அழைப்புகளுக்கிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி ........................ ஆகும்.

15. G Ltd. முழுவதும் ஒப்பப்பட்ட ஒவ்வொன்றும் ரூ. 10 முக மதிப்புடைய 1,00,000 பங்குகள் வெளியிட்டது. அழைக்கப்பட்டத் தொகை பங்கொன்றுக்கு ரூ. 7 எனில்; அழைக்கப்படாத முதல் ரூ. ........................ ஆகும்.

www.StudyGuideIndia.com

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

16. கூடியுள்ள வட்டி .............................. ஆகும்.

அ) வருமானம்

ஆ) சொத்து

இ) பொறுப்பு.

17. 31. 03. 2005ம் நாளன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 50,500. வாராக் கடன் ரூ. 500 போக்கெழுதப்பட வேண்டும். மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. .......................... ஆகும்.

அ) ரூ 2,525

ஆ) ரூ 2,600

இ) ரூ 2,500.

18. முழுமைப் பெறாத பதிவேடுகளைப் பொதுவாகப் பயன்படுத்தும் நிறுவனம் ............... .

அ) சிறு வியாபாரிகள்

ஆ) அரசு

இ) நிறுமங்கள்.

19. 2004 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் ரூ. 39,600 ; 2005 மார்ச் 31 அன்று கடனாளிகள் ரூ. 49,900. அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ. 69,500 எனில், அவ்வாண்டின் கடன் விற்பனை ......................... ஆகும்.

அ) ரூ. 20,000

ஆ) ரூ. 59,200

இ) ரூ. 79,800.

www.StudyGuideIndia.com

20. ஒரு சொத்தின் அடக்க மதிப்பு ரூ. 10,000. குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% வீதம் நீக்கப்பட்டால், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அச்சொத்தின் ஏட்டு மதிப்பு ........................ ஆகும்.

அ) 7,290

ஆ) 7,920

இ) 2,790.

21. குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம் :

அ) ஆண்டுதோறும் அதிகமாகும்

ஆ) ஆண்டுதோறும் நிலையாக இருக்கும்

இ) ஆண்டுதோறும் குறையும்.

22. அனைத்து வகையுடைமை விகிதங்களும் ........................... ஆல் கொடுக்கப்படும்.

அ) விகிதாச்சாரம்

ஆ) மடங்கு

இ) சதவீதம்.

23. கீழ்க்கண்ட சொத்துக்களில் மிக விரைவாக ரொக்கமாக்கக் கூடியவை

அ) நடப்பு சொத்து

ஆ) நீர்மை சொத்து

இ) நிலையான சொத்து.

www.StudyGuideIndia.com

4. திட்டப் பட்டியல் என்பது ............................ காலத்திற்கான மதிப்பீடு ஆகும்.

அ) எதிர்

ஆ) நடப்பு

இ) கடந்த.

5. முதல் மீதான வட்டி ............................ மீது கணக்கிடப்படுகிறது.

அ) தொடக்க முதல்

ஆ) இறுதி முதல்

இ) சராசரி முதல்.

6. கூட்டாண்மையில் ஒப்பந்தம் ............................ .

அ) கட்டாயமில்லை

ஆ) கட்டாயமானது

இ) தேவையில்லை.

7. நற்பெயர் ஒரு ............................ சொத்து.

அ) புலனாகும்

ஆ) புலனாகச்

இ) கற்பனைச்.

8. புதிய கூட்டாளி சேர்க்கையில், பகிர்ந்து தரப்படாத இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவது ............................ .

அ) புதிய கூட்டாளியின் முதல் கணக்கிற்கு மட்டும்

ஆ) பழைய கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு மட்டும்

இ) அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு.

www.StudyGuideIndia.com

29. இருப்புநிலைக் குறிப்பில் முதலினக் காப்பு ............................ பக்கம் தோன்றும்.

அ) பொறுப்புகள்

ஆ) சொத்துக்கள்

இ) இரண்டும்.

30. ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ. 3,000. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறு வெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ரூ. 1,500 எனில் முதலின காப்பு ரூ. ............................ .

அ) ரூ. 2,500

ஆ) ரூ. 4,500

இ) ரூ. 1,500.

## பகுதி - ஆ

( மதிப்பெண்கள் : 10 × 5 = 50 )

குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

iii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. கொடுபட வேண்டிய செலவுகள் என்றால் என்ன ?

32. ஒற்றைப் பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.

33. மறுமதிப்பீட்டு முறையில் தேய்மானம் கணக்கிடுதல் என்றால் என்ன ?

34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் முக்கியத்துவம் யாவை ?

35. ரொக்கப் பெறுதல்களுக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக.

www.StudyGuideIndia.com

36. நற்பெயர் மதிப்பிடும் முறைகளைத் தருக.

37. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன ?

38. வாராக் கடன் ரூ. 2,500 போக்கெழுதியதற்கு சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.

39. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கண்டுபிடி :

| | ரூ. |
|---|---|
| பற்பல கடனாளிகள் ( 01. 04. 2004 ) | 50,000 |
| பற்பல கடனாளிகள் ( 31. 03. 2005 ) | 75,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 80,000 |
| கடனாளிகளுக்கு அளித்த தள்ளுபடி | 2,000 |
| விற்பனைத் திருப்பம் | 5,000 |
| ரொக்க விற்பனை | 79,000 |

40. திருவாளர்கள் விக்டரி & கோ ரூ. 50,000 மதிப்புள்ள பொறி வகை ஒன்று வாங்கியது. அச்சொத்தின் மீது தேய்மானம் ஆண்டு தோறும் நேர்க்கோட்டு முறையில் அனுமதித்தது. அப்பொறி வகையின் பயனளிக்கும் காலம் 10 வருடங்கள். பயனற்ற நிலையில் அதன் மதிப்பு ரூ. 5,000 எனில் தேய்மான விகிதத்தை கணக்கிடுக.

41. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முதல்-விற்பனை விகிதம் காண்க :

| | ரூ. |
|---|---|
| ரொக்க விற்பனை | 2,00,000 |
| கடன் விற்னை | 1,75,000 |
| விற்பனைத் திருப்பம் | 25,000 |
| சாதாரணப் பங்கு முதல் | 1,00,000 |
| நீண்டகாலக் கடன் | 50,000 |
| காப்புகள் | 25,000 |

www.StudyGuideIndia.com

[ Turn over

42. $V$ மற்றும் $S$ எனும் கூட்டாளிகள் முறையே 7 : 5 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். $V$ என்பவர் 2004 ம் ஆண்டில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ. 400 முறையாக ஆண்டு முழுவதும் திரும்ப எடுக்கிறார். $S$ என்பவர் அதே ஆண்டில் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ரூ. 800 முறையாக திரும்ப எடுக்கிறார். ஆண்டுக்கு 10% வீதம் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடுக.

43. நீலா மற்றும் நிக்கீட்டா எனும் கூட்டாளிகள் 4 : 3 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் பூஜா என்பவரை $\frac{1}{5}$ இலாபப் பங்கிற்கு புதிய கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும், தியாக விகிதத்தையும் கணக்கிடுக.

44. சக்ஸஸ் நிறுமம், பங்கு இறுதி அழைப்புத் தொகையான ரூ. 4 பங்கொன்றின் மீது செலுத்தத் தவறியதற்காக, 500 முழுவதும் அழைக்கப்பட்ட ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்புடைய பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. பின்னர் அதில் 300 பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டவையாக வெளியிட்டது. தேவையான குறிப்பேட்டு பதிவுகள் தருக.

## பகுதி - இ

( மதிப்பெண்கள் : 5 × 12 = 60 )

*குறிப்பு* : i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 45 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

iii) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. அ. 31. 03. 2003 அன்றைய இருப்பாய்வின்படி, பற்பல கடனாளிகள் ரூ 1,25,000.

*சரிக்கட்டுதல்கள் :*

i) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ரூ. 5,000

ii) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.

iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ. திரு. ராஜன் என்பவர் தனது ஏடுகளை ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் ரூ. 3,25,000 முதலுடன் 2003 ஏப்ரல் 1ந் தேதி வியாபாரத்தைத் தொடங்கினார். 2004 மார்ச் 31ந் தேதி அன்று அவருடைய நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது :

| | ரூ. |
|---|---|
| கையில் ரொக்கம் | 3,000 |
| பற்பல கடனீந்தோர் | 50,000 |
| வங்கியில் ரொக்கம் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 12,000 |
| அறைகலன் | 40,000 |
| கொடுபடாச் செலவுகள் | 6,000 |
| பொறி வகை | 2,00,000 |
| பற்பல கடனாளிகள் | 1,50,000 |
| சரக்கிருப்பு | 1,50,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 15,000 |

நிதியாண்டின் இடையில் ரூ. 40,000 கூடுதல் முதல் இட்டார். மற்றும் அவர் தனது குடும்பச் செலவுகளுக்காக ரூ 15,000 எடுத்துக் கொண்டார். 2003 - 2004 ம் ஆண்டிற்கான அவருடைய இலாபம் அல்லது நட்டத்தைக் காண்க.

தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களை விவரி.

ரொக்கத் திட்டப் பட்டியல் என்றால் என்ன ? அதன் தன்மைகள் மற்றும் நன்மைகளை விளக்குக.

நற்பெயர் என்றால் என்ன ? நற்பெயரைப் பாதிக்கும் காரணிகளை விளக்குக.

டாடா லிமிடெட் 01. 01. 2003 அன்று ரூ. 1,00,000 த்திற்கு இயந்திரம் ஒன்று வாங்கியது. பிறகு 2004 ஜூன் மாதம் 30ம் நாள் மற்றொரு இயந்திரத்தை ரூ. 70,000 த்திற்கு வாங்கியது. 2005 செப்டம்பர் 30ம் நாளன்று அந்நிறுவனம் முதல் இயந்திரத்தை ரூ. 57,000 மதிப்பிற்கு விற்பனை செய்தது. நேர்க்கோட்டு முறையில் ஆண்டுக்கு 10% வீதம் தேய்மானம் நீக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 31ந் தேதி கணக்கு முடிக்கப்படும் எனக் கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரம் தேய்மானக்

www.StudyGuideIndia.com

50. கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து மொத்த இலாப விகிதம், நிகர இலாப விகிதம் மற்றும் இயக்க இலாப விகிதம் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க :

| | ரூ. |
|---|---|
| விற்பனை | 1,20,000 |
| மொத்த இலாபம் | 30,000 |
| நிர்வாகச் செலவு | 1,000 |
| விற்பனைச் செலவு | 2,000 |
| இயந்திரம் விற்றதில் நட்டம் | 800 |
| பெற்ற பங்காதாயம் | 400 |
| நிகர இலாபம் | 26,600 |

51. *X, Y* எனும் கூட்டாளிகள் முறையே ரூ. 60,000, ரூ. 20,000 முதலிட்டு 2005 ஜனவரி 1 ஆம் நாள் அன்று கூட்டாண்மைத் தொழில் தொடங்கினர். 2005 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் இலாபம் ( உடன்பாட்டில் கூறப்பட்டவைகளைச் சரிக்கட்டும் முன் ) ரூ. 12,000. முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கப்படுகிறது. *Y* க்கு ஊதியம் ஆண்டுக்கு ரூ. 3,000 அனுமதிக்கப்படுகிறது. அந்த ஆண்டு *X* சொந்த பயனுக்காக எடுத்துக் கொண்டத் தொகை ரூ. 2000. *Y* எடுத்துக் கொண்ட தொகை ரூ. 1000. அதற்கான வட்டி முறையே *X* ரூ. 100 ; *Y* ரூ. 50 ஆகும்.

*X, Y* ஆகிய இருவரும் சமமான விகிதத்தில் இலாபம் பகிர்ந்துக் கொள்வதாகக் கொண்டு இலாப-நட்டப் பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் மாறுபடும் முதல் கணக்கையும் தயாரிக்க.

52. லக்கி லிமிடெட்டின் இயக்குநர்கள், ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்புடைய 1000 சாதாரணப் பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை ரூ. 3 மற்றும் இறுதி அழைப்புத் தொகை ரூ. 3 யும் செலுத்தப்படாததால் அவற்றை ஒறுப்பிழப்பு செய்தனர்.

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் 400 பங்குகள் மட்டும் ரூ. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன.

தேவையான குறிப்பேட்டு பதிவுகள் தந்து: பேரேட்டில் பங்கு ஒறுப்பிழப்பு கணக்கையும், முதலின காப்புக் கணக்கையும் தயாரிக்க.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

( மதிப்பெண்கள் : 3 × 20 = 60 )

குறிப்பு : i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்க. **53** வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

ii) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

அ) திரு. K. அருண் என்பவர் முழுமைப் பெறா இரட்டைப்பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31. 03. 2005 ம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான வியாபார, இலாப-நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க :

| | 01. 04. 2004 | 31. 03. 2005 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பற்பல கடனீந்தோர் | 37,500 | 43,750 |
| அறைகலன் | 2,500 | 2,500 |
| ரொக்கம் | 6,250 | 10,000 |
| பற்பல கடனாளிகள் | 62,500 | 87,500 |
| சரக்கிருப்பு | 25,000 | 12,500 |

மற்ற விவரங்கள் :

| | ரூ. |
|---|---|
| எடுப்பு | 10,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,750 |
| அளித்த தள்ளுபடி | 2,500 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,35,000 |
| கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம் | 1,12,500 |
| விற்பனைத் திருப்பம் | 3,750 |
| கொள்முதல் திருப்பம் | 1,250 |
| பற்பலச் செலவுகள் | 8,750 |

அறைகலன் மீது 5% தேய்மானம் அனுமதிக்க வேண்டும்.

***( அல்லது )***

www.StudyGuideIndia.com

ஆ) J மற்றும் V என்ற கூட்டாளிகள் 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்
2003 டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களது இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

**2003 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் : | | | நிலமும் கட்டிடமும் | | 40,000 |
| J | 30,000 | | இயந்திரம் | | 10,000 |
| V | 25,000 | 55,000 | முதலீடுகள் | | 10,000 |
| காப்பு நிதி | | 10,000 | சரக்கிருப்பு | | 11,000 |
| பற்பல கடனீந்தோர் | | 16,000 | பற்பல கடனாளிகள் | 5,000 | |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 6,800 | கழி: வாரா | | |
| | | | ஐயக்கடன் ஒதுக்கு | 200 | 4,800 |
| | | | ரொக்கம் | | 2,000 |
| | | | இலாப - நட்டக் கணக்கு | | 10,000 |
| | | 87,800 | | | 87,800 |

2004 சனவரி 1 ஆம் நாளன்று கீழ்வரும் பகிர்வுகளுக்குட்பட்டு L என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர் :

i) L ரூ. 20,000 முதல் கொண்டு வருவது - இலாப பங்கு $\frac{1}{3}$.

ii) ஏடுகளில் நற்பெயர் ரூ. 36,000 எனத் தோற்றுவிப்பது.

iii) நிலம் ரூ. 45,000 எனவும் முதலீடுகள் ரூ. 25,000 எனவும் மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

iv) சரக்கிருப்பின் மதிப்பில் ரூ. 2,000 குறைக்கப்பட்டது.

v) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 300 ஆக இருக்குமாறு அதிகரிக்கப்பட்டது.

vi) கடனீந்தோரில் ரூ. 500 போக்கெழுதுவது.

மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க.

www.StudyGuideIndia.com

ிரு. ருசோ என்பவரது கீழ்க்கண்ட இருப்பாய்விலிருந்து 31. 12. 2005 ம் நாளோடு
முடிவுறும் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை தயார் செய்க :

31. 12. 2005 ம் நாளன்றை இருப்பாய்வு

| ற்று விவரம் | ரூ. | விவரம் | வரவு ரூ. |
|---|---|---|---|
| கையிருப்பு ரொக்கம் | 65,000 | முதல் | 2,00,000 |
| ங்கியிருப்பு ரொக்கம் | 17,000 | விற்பனை | 1,60,000 |
| டுப்பு | 40,000 | பற்பல கடனீந்தோர் | 45,000 |
| லி | 10,000 | | |
| காள்முதல் | 20,000 | | |
| ரக்கிருப்பு ( 1. 1. 2005 ) | 60,000 | | |
| ட்டிடம் | 1,00,000 | | |
| ற்பல கடனாளிகள் | 78,000 | | |
| ாடகை | 7,000 | | |
| பாதுச் செலவுகள் | 8,000 | | |
| | 4,05,000 | | 4,05,000 |

ிக்கட்டுதல்கள் :

இறுதிச் சரக்கிருப்பு ரூ. 40,000.

எடுப்பு மீதான வட்டி ஆண்டுக்கு 5% அனுமதிக்க.

) கட்டிடம் மீது தேய்மானம் ஆண்டுக்கு 10% அனுமதிக்க.

) வாராக் கடன் ரூ. 1,000 போக்கெழுதுக.

www.StudyGuideIndia.com

55. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வியாபார, இலாப - நட்டக் கணக்கு துணை கொண்டு காண்க :

i) மொத்த இலாப விகிதம்

ii) நிகர இலாப விகிதம்

iii) இயக்க விகிதம்

iv) சரக்கிருப்பு விற்பனை விகிதம்

**J.J.D & CO நிறுமத்தின் 31. 03. 2005 ம் நாளோடு முடிவுறும் ஆண்டிற்கான வியாபார, இலாப-நட்டக் கணக்கு :**

ப வ

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,99,000 | விற்பனை | 17,00,000 |
| கொள்முதல் | 11,19,000 | இறுதிச் சரக்கிருப்பு | 2,98,000 |
| மொத்த இலாபம் கீ / இ | 6,80,000 | | |
| | 19,98,000 | | 19,98,000 |
| நிர்வாகச் செலவுகள் | 3,00,000 | மொத்த இலாபம் கீ / கொ | 6,80,000 |
| விற்பனைச் செலவுகள் | 60,000 | வட்டி | 18,000 |
| நிதிசார் செலவுகள் | 30,000 | | |
| பொறிவகை விற்றதில் நட்டம் | 8,000 | | |
| நிகர இலாபம் | 3,00,000 | | |
| | 6,98,000 | | 6,98,000 |

www.StudyGuideIndia.com

பின்வரும் விவரங்களிலிருந்து 2005 அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப் பட்டியலைத் தயாரிக்க :

| மாதம் | விற்பனை ரூ. | கொள்முதல் ரூ. | செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| செப்டம்பர் 2005 | 10,00,000 | 8,00,000 | 1,10,000 |
| அக்டோபர் 2005 | 12,00,000 | 12,00,000 | 1,30,000 |
| நவம்பர் 2005 | 14,00,000 | 8,00,000 | 1,50,000 |
| டிசம்பர் 2005 | 16,00,000 | 10,00,000 | 1,70,000 |

கூடுதல் தகவல்கள் :

i) 01. 10. 2005 அன்று தொடக்கக் கையிருப்பு ரொக்கம் ரூ. 90,000.

ii) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும்.

iii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம்.

iv) செலவுகள் ஒரு மாதம் கடந்தபின் செலுத்தப்படுகிறது.

v) ரூ. 4,00,000 மதிப்புள்ள ஒரு சொத்து டிசம்பரில் வாங்கப்பட உள்ளது.

சரஸ்வதி வரையறு நிறுமம் பங்கொன்று ரூ. 100 முகமதிப்புடைய 30,000 பங்குகளை பங்கொன்று ரூ. 120 க்கு வெளியிட்டது. தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும் :

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. 25. |
| ஒதுக்கீட்டின் போது ( முனைமம் உட்பட ) | ரூ. 45. |
| முதல் அழைப்பின் போது | ரூ. 25. |
| இறுதி அழைப்பின் போது | ரூ. 25. |

பங்குகள் அனைத்தும் விண்ணப்பிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. இரண்டு அழைப்புகளும் விடுக்கப்பட்டு உரிய நேரத்தில் தொகைகளும் பெறப்பட்டன.

குறிப்பேட்டு பதிவுகள் தந்து, தேவையான பேரேட்டு கணக்குகளையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

www.StudyGuideIndia.com